NARI NATIONAL AGEING RESEARCH INSTITUTE

DrawCare
*Multicultural digital care for dementia*

# மற்றவர்களுடன் தொடர்பாடல் கொள்வதில் சிரமங்கள்

என் மனைவி பல வழிகளில் மாறிவிட்டார். அவருடைய மறதி நோய் அதிகரிக்க அதிகரிக்க, பேசுவது அவருக்கு சிரமமாக ஆகிவிட்டது. அது சுலபம் இல்லைதான், ஆனாலும், வித்தியாசமானதொரு வாழ்க்கைக்கு ஏற்றவாறு நாங்கள் எங்களைச் சரிப்படுத்திக்கொண்ட பொழுது தொடர்பாடல் கொள்வதற்கான புதிய வழிகளை நாங்கள் கற்றுக்கொண்டோம்.



உங்களுடைய அன்பிற்குரியவரது செவி மடுப்பு சாதனம் அல்லது கண்-கண்ணாடிகள் சரியாகப் பொருந்துகின்றனவா என்று பாருங்கள். அவருடைய பார்வையில் பொருட்கள் இன்னும் தெளிவாகப் படுவதற்கு உதவும் வகையில் வித்தியாசமான, மாறுபடும் நிறங்களைப் பயன்படுத்த முயற்சி செய்யுங்கள். மெதுவாகவும், போதுமான அளவிற்கு உரக்கவும் பேசுவது கவனத்தைக் குவிக்க உதவியாக இருக்கும். ஒரு புன்னகை, ஒரு அணைப்பு அல்லது பாராட்டு ஆகியன அவருடைய பதற்றத்தைக் குறைக்கும். பராமரிப்பாளர்களுக்கான ஆதரவுதவிக் குழுக்கள், வீட்டில் வைத்து அளிக்கப்படும் பராமரிப்பு மற்றும் இடையோய்வு சேவைகள், தீவிர பராமரிப்புத் திட்டங்களுக்கான விருப்பத்தெரிவுகள் ஆகியவற்றின் மூலமாக மறதி நோயைப் பற்றிய மேலதிகத் தகவல்களும், அதற்கான உதவியும் கிடைக்கும்.

## உங்களுடைய மருத்துவருடனும், தொடர்பாளியுடனும் பேசுங்கள்



Translating and Interpreting Service (TIS)
நாளுக்கு 24 மணி நேரமும், வருடத்தின் ஒவ்வொரு நாளும் உடனடித் தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பு
131 450
www.tisnational.gov.au

My Aged Care 1800 200 422 www.myagedcare.gov.au

Dementia Australia, National Dementia Helpline 1800 100 500
www.dementia.org.au

Carer Gateway 1800 422 737 www.carergateway.gov.au

Advance Care Planning Australia 1300 208 582
www.advancecareplanning.org.au

© National Ageing Research Institute 2022
Resources were adapted and translated from iSupport for dementia: training and support manual for carers of people with dementia. Geneva: World Health Organization (WHO); 2019. License: CC BY-NC-SA 3.0 IGO.
Translated resources were not created by the WHO. The WHO is not responsible for the content or accuracy of translations used. The original English edition shall be the binding and authentic edition